ந.க.எண். 974 / 2005 / அ1 (மையம்) நாள். 30.10.2009.

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 1994ம் வருடத்திய

## சட்டப் பிரிவு எண்.121 (4) (a) –ன் படியான முக்கிய அறிவிப்பு

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 1994ம் வருடத்திய சட்டப் பிரிவு எண்.121 (4) (a)ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி விவசாயத்திற்கென்றே பிரத்தியோகமாகப் பயன்படுத்தப்படாமலும், கட்டிடங்கள் இல்லாமலும் அல்லது கட்டிடங்களுக்கு அடுத்தாற்போல் இராமலும் அல்லது கட்டிடங்களைச் சேர்ந்திராமலும் உள்ள காலிமனை மீதான சொத்துவரி விதிப்பில் தற்போதுள்ள நடைமுறை மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, மூலதன மதிப்பில் நூற்றுக்கு இவ்வளவென (விழுக்காடு) மேற்படி வரியாக விதிக்கப்படும் முறை மாற்றப்பட்டு, நிலத்தின் பரப்பளவின் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்படவுள்ளது. அரசு ஆணை கண்.151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.20.8.2009ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச அரை ஆண்டு வரி எல்லைகளுக்குட்பட்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண். 130, நாள், 28.10.2009ல் சதுர அடிக்கு அரையாண்டுக்கான காலிமனை வரியை கீழ்கண்டவாறு நிர்ணயித்துத் தீர்மானித்துள்ளது.

அத்தீர்மானத்தின்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குள் உள்ள காலிமனை வரிவிதிப்புகளை 1.10.2009 முதல் திருத்தியமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மனை அமைவிடம் | சதுர அடிக்கு, அரையாண்டுக்கு காலிமனை சொத்துவரி (பைசாவில்) |
|---|---|---|
| 1 | அ) குடியிருப்பு பகுதியில் உள்ள தெருக்கள் | 0.30 பைசா |
| 2 | ஆ) பிரதான சாலையில் இணையாத முக்கிய சாலை மற்றும் பேரூந்து செல்லும் சாலைகள் | 0.50 பைசா |
| 3 | இ) பிரதான சாலையுடன் இணைந்துள்ள முக்கிய சாலைகள், பேருந்து செல்லும் சாலைகள் | 0.60 பைசா |

விவசாயத்திற்கென்றே பிரத்தியோகமாகப் பயன்படுத்தப்படாமலும், கட்டிடங்கள் இல்லாமலும் அல்லது கட்டிடங்களுக்கு அடுத்தாற்போல் இராமலும் அல்லது கட்டிடங்களைச் சேர்ந்திராமலும் உள்ள அனைத்து காலிமனைகளுக்கும் காலிமனை மீதான சொத்துவரி விதிப்புக்கு 1.10.2009 முதல் உட்படுத்தப்படும். அதன்மீது, அரசு, ரயில்வேத்துறை மற்றும் கம்பெனிகள் அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள்ளும் இதர வரிவிதிப்புதாரர்கள் 30 நாட்களுக்குள்ளும் மாநகராட்சி அலுவலகத்தில் சேரும்படியாக வரி சீராய்வு மனுக்களை அனுப்பலாம்.

மேற்படி காலிமனை உரிமைதாரர்கள், காலிமனைக்கான முழு விவரங்களை உரிய படிவத்தில் மாநகராட்சி நிர்ணயிக்கும் கால அவகாசத்திற்குள் மாநகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பும்படி தனியே விரைவில் அறிவிப்பு வழங்கப்படும். மனை உரிமைதாரரோ அவரது ஒப்புதல் பெற்ற முகவரோ குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் உரிய விவரங்களை முழுமையாகத் தரத் தவறினால், மாநகராட்சி அலுவலர்கள் மூலம் உரிய விவரங்களை சேகரித்து அதனடிப்படையில் புதிய முறைப்படி காலிமனை வரிவிதிப்பு செய்யப்படும்.

(ஒம்) த.தி.பால்சாமி,
ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.